தொகுதி 9]

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாரண ௵ புரட்டாசி மீ
SEPTEMBER 1944

"முயற்சி திருவினை யாக்கும்"

## பொருளடக்கம்

பக்கம்

1. ஆரம்பப் பாடசாலைகளும் புதுவித அளவைகளும் .... 79
—A. K. David
2. முதியோர் கல்வி—"வே" .... .... .... 8[illegible]
3. செய்தித் திரட்டு .... ... .... 8[illegible]

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. மூலம் சந்தா தொகை வசூலிக்கப்பட நேரிடும். வி. பி. அனுப்புவதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால், சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவிடும்படி நேயர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தவிர காகிதக் கஷ்டத்தினாலோ, அச்சாபிஸ் ஆள் கஷ்டத்தினாலோ, தாமதமேற்பட்டாலன்றி, ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா

1944 செப்டம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 6, 19-A. செங்கற்பட்டு — Ch. 4, 22, 23, 24, 44.
வடஆற்காடு — N. A. 21-A, 37.
தென்னாற்காடு — S. A. 1-B, 8, 26.
தஞ்சாவூர் — Tan, 28, 59.
திருச்சி — Tri. 10, 11, 15, 16-A, 21-A.
மதுரை — Md. 45-A, 120.
திருநெல்வேலி — Tin. 8, 11, 22-A, 56.
சேலம் — S. 10-A., 12, 13, 14, 15-A, 42, 52.
கோயமுத்தூர் — Co. 21, 30, வெளிநாடு – Mis-55.

முக்கிய கவனிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.


**S. I. T. U. PROTECTION FUND, LTD.,**
520, High Road, Triplicane, Madras.

**ஒவ்வொரு உபாத்தியாயரும் சேர வேண்டிய நிதி**

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,90,000 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,620 |
| யூனிட்டுகள் | ... | ... | 3,125 |

★

**ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்**
கொடுக்கப்பட்டிருக்கிறது

★

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி

# பாலர் கல்வி

| தொகுதி 9 | 1944 ௵ செப்டம்பர் ௴<br>தாரண ௵ புரட்டாசி ௴ | பகுதி 6 |
|---|---|---|


## ஆரம்பப் பாடசாலைகளும் புதுவித அளவைகளும்


**A. K. David, B. A., L. T.,** *D. I. of Schools, Chengam Range.*



73-ம் பக்கம் தொடர்ச்சி.


முந்தின இதழில் விவரிக்கப்பட்ட ஐவகையளவைகளையும், விசேஷமாக வகுப்புக்கு ஒரு ஆசிரியருள்ள பாடசாலைகளிலும், உயர்தர ஆரம்பப் பாடசாலைகளிலும் செவ்வனே, போதனை முறையாகவோ, அல்லது பாடங்களுக்கு முக்கிய அநுபந்தங்களாகவோ கையாண்டு வந்தால், கல்வியிலும் மாணவ மாணவிகள், வருங்காலத்தில் தாமாகவே விஷயங்களை நிதானித்தறிந்து கொள்ளும் சக்தியுடையவர்களாய் விளங்குவார்களென்பதற்கையமில்லை.

முன் கவனித்த சில அளவைகளைத் தவிர, (Standardised test) நிர்ணயிக்கப்பட்ட அளவையென வகுக்கப்பட்ட, சில அளவுகள் உலவுகின்றன. ஒரு நிர்ணயிக்கப்பட்ட அளவையென்பதில் சில முக்கிய அம்சங்களுண்டு. (1) அது அமைப்பிலும், உருவகத்திலும் வித்தியாசப்படாது. (2) அது உபயோகிக்கும் முறையிலும், மதிப்பிடும் வகையிலும் மாறலாகாது. (3) ஒப்பிடுவதற்கான ஒரு சரியான ஸ்கேல் (Norm) கிடைக்கும். மேலும் அவ்விதம் நிர்ணயிக்கப்பட்ட அளவையினால், குறிப்பிட்ட வயதுப் பையனின், அல்லது பெண்ணின் சராசரி வேலையை யறிந்து கொள்ள ஹேதுவுண்டு.

மேற்கூறிய அளவைகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

(1) பாடசாலைப் பாடங்களின் அளவைகள்.

(2) மனோநிலையறியு மளவைகள்.

முதல் பிரிவினால் அறிவுவகைகள், திறமைகள், கலைகள் அளவிடப் படலாம். இதர அளவையினால் மனப்பான்மை, மனோவெழுச்சி, இயற்கைத் திறமை, மனநிலையின் கூறு முதலியன அளவிடப் படலாம்.

நாம் முதலில், ஆரம்பப் பாடசாலைகளில் முக்கிய கவனம் செலுத்தி வரும் பாடங்களையெடுத்து அவைகளின் தேர்ச்சியை நூதன முறையில் எவ்விதமளவிடலாமென சிறிது ஆராய்வோம்.

முதலில் வாசிப்பு. ஆரம்பப் பாடசாலையில் வாசிப்பு கற்பிக்கும் நோக்கத்தையறிந்து, அதன் பின்னர் நாம் கையாளும் முறை நோக்கத்தைப் பூர்த்தி செய்யக் கூடியதாயிருக்கிறதாவென அறியவேண்டும்.

சுவடிகளிலும், கைப்பிரதிகளிலும், புத்தகங்களிலு மடங்கியுள்ள பல அரிய பெரிய விஷயங்களை யறிந்து கொள்வதற்கு உதவியாயிருப்பது வாசிப்பு. இது இருவகைப்படும். வாய்மொழி வாசிப்பு, மௌன வாசிப்பு. ஆசிரியர்கள் சாதாரணமாகப் பிள்ளைகளுடைய வாசிக்குந்திறனை அவர்கள் படித்துள்ள புத்தகத்திலிருந்தே யறிய முயற்சிக்கின்றனர். இவ்விதம் முயல்வது மட்டும் போதாது. வாசிப்பதில் வேகமும் விஷய அறிவில் தெளிவு மேற்படிருக்கிறதாவென அறிதல் வேண்டும். இவ்விதமறிந்து, வாசிப்பின் பயனை நிர்ணயிக்க, பிள்ளைகளுக்கு பழக்க மேற்படாத புதிய சொற்களையோ, வாக்கியங்களையோ, விஷயங்களடங்கிய பத்திகளையோ வாசிக்கக் கொடுத்தல் அவசியமாகிறது.

வாசிப்பில், நிரம்ப [illegible] புது அனுபவங்கள் கொடுப்பதும், வாசிப்பதற்கு. ஒரு பலமான [illegible]ண்டுதலும், நிரந்தரமான பிரியமும், தீவிரமான பழக்கமும், திறமையு மேற்படச் செய்வதும் ஆசிரியருடைய கருத்தாயிருக்க வேண்டும்.

வாசிப்பிலடங்கியுள்ள பல விஷயங்களைப் பரிசீலனை செய்ய கல்வி நிபுணர்கள் தொகுத்துள்ள சில முறைகளை கவனித்தபின், நம் தமிழ் பாஷை சம்பந்தமாய் அவைகளை யெவ்விதம் பயன் படுத்தல்ாமென சிந்திப்போம்.

Ballard என்னும் பெரியார் ஆங்கிலப் பதங்களடங்கிய ஒரு நிமிஷ வாசிப்புஅளவுஒன்று வகுத்திருக்கிறார். அது ஒன்றுக் கொன்று சம்பந்தப் படாத, வழக் காற்றிலுள்ள பதங்களின் அட்டவணையே. அதையடுத்தும், விபரீதமாகவும் இன்னும் பல நிபுணர்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ஆப்பிரிக்கா முதலான தேசங்களில் பலவித அளவைகள் தயாரித்து உபயோகித்து அதன் விளைவைத் தெரியப் படுத்தியிருக்கின்றனர். நமது நாட்டிலும் வடபாகங்களில் ஒரு சிலர் முன் வந்து மராத்திய, தெலுங்கு முதலிய பாஷைகளுக்கு இவ்வித அளவைகள் வகுத்து சிற்சில இடங்களில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தென்னிந்தியாவில் நம் தாய் பாஷையாகிய தமிழ் சம்பந்தப்பட்டவளவில், எவரும் முன்வந்து அத்தகைய அளவைகளை வகுத்ததாக யாம் அறியோம். தமிழ் பாஷை வழங்கி வரும் ஜில்லாக்களில் உபயோகிக்கக் கூடிய பல] வாசிப்பு அள்வைகள் (Reading Tests) தயாரிக்கலா மென்னும் கருத்துக் கொண்டு, பின்வருபவைகளை வெளியிடத் துணிந்தேன். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் இவைகளை வெகுவாக ஆதரிப்பார்களென நம்புகிறேன்.

DAVID'S One Minnte

| | | | | |
|---|---|---|---|---|
| Reading Test. | | | | 1 |
| ,, | ,, | ,, | | 2 |
| ,, | ,, | ,, | | 3 |
| ,, | ,, | ,, | | 4 |
| ,, | ,, | ,, | | 5 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள 5 அளவைகளும் வார்த்தைகளின் அறிவையும் (word recognition) வாசிப்பின் வேகத்தையும் (Speed) அறிந்து கொள்ள வகுக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று வகுப்புகளிலும் இவைகளை நன்கு பயன் படுத்தலாம், மேலும் 4ம் 5ம் வகுப்புப் பிள்ளைகளின் (Reading Speed) வாசிப்பின் வேகத்தையும் கணிக்க உதவியாயிருக்கும்.

வாசிப்பின் ஏனைய பிரிவுகளினறிவு அளவைகளை அடுத்த இதழில் காண்க.

DAVID'S One Minute Reading Test 1.

| | | |
|---|---|---|
| அம்மா | ஆலமரம் | இந்த |
| கட்டு | காடு | கின்னம் |
| சட்டை | சாதம் | நிலம் |
| தண்டு | தாடி | விறகு |
| நட்டு | நான் | கோழி |
| பழம் | பாடம் | எருமை |
| மகன் | மாமா | செடி |
| வடம் | வாசல் | தொட்டி |
| | | மோர் |

DAVID'S one Minute Reading Test 2.

| | | |
|---|---|---|
| அணில் | யாட்டி | நெல் |
| கடை | வால் | பூட்டு |
| சர்க்கரை | நூல் | செம்பு |
| தம்பி | பருப்பு | சேவல் |
| பந்து | சுவர் | தொப்பி |
| மணல் | மூக்கு | தோல் |
| வண்டி | உதடு | தலை |
| ஆடு | சிப்பு | கிளி |
| கால் | ஏணி | ஐந்து |
| நாய் | | |

DAVID'S one Minute Reading Test 3.

| | | |
|---|---|---|
| அரிசி | காது | விரல் |
| கண் | தாத்தா | வீடு |
| கட்டில் | பால் | சேலை |
| கத்தி | பானை | தொட்டில் |
| கதவு | மாடு | சோறு |
| சட்டி | வாழை | தோட்டம் |
| தண்ணீர் | உப்பு | தூடு |

| | | |
|---|---|---|
| பசு | உரல் | தோசை |
| பந்தல் | குடம் | அண்ணன் |
| மழை | குளம் | இரவு |
| வடை | முட்டை | |
| நகம் | பூனை | |
| காய் | பெட்டி | |

**DAVID'S one Minute Reading**

Test 4.

| | | |
|---|---|---|
| அவன் | பாம்பு | பெண் |
| கப்பல் | மாலை | வெட்டு |
| சக்கரம் | வாங்கு | ஏற்றம் |
| தயிர் | இளநீர் | கேசவன் |
| நண்டு | கிணறு | தேர் |
| பட்டு | வில் | மேடு |
| மரம் | ஈயம் | வேலை |
| வயல் | இலை | உடல் |
| ஆப்பம் | தீபம் | குயவன் |
| காற்று | நீலம் | கொம்பு |
| சாம்பல் | எழுது | பொங்கல் |
| தாய் | செருப்பு | ஊஞ்சல் |
| நாம் | தென்னை | தோப்பு |
| கோபுரம் | | |

**DAVID'S one Minute Reading**

Tests 5.

| | |
|---|---|
| அப்பம் தா | நல்ல நாய் |
| கல் வீடு | பழம் வாங்கு |
| சந்தை கூடும் | மண் பானை |
| தண்ணீர் குடி | வண்டல் மண் |
| ஆட்டு மந்தை | |
| மாந் தோப்பு | |
| வாழைப் பழம் | |
| இரவில் தூங்கு | |
| குதிரை வண்டி | |
| முந்திரிப் பருப்பு | |
| உலகப் படம் | |
| என் அண்ணன் | |
| நெல் வயல் | |
| வெள்ளிக் கிண்ணம் | |
| தென்னை மரம் | |
| நன்று எழுது | |
| சேவல் கூவும் | |
| ஒன்பது மணி | |
| கொட்டை முத்து | |
| ஓடி விளையாடு | |
| கோபுர வாசல் | |


# WALL MAPS and GLOBES

IN

ENGLISH, TAMIL, MALAYALAM & TELUGU

*INDIAN MADE*

*WELL FINISHED*

## WALL MAPS

POLITICAL ENGLISH

Beautifully Finished in Colours 30" × 40"
ASIA, EUROPE, AFRICA, NORTH-AMERICA, SOUTH AMERICA & AUSTRALIA. ... Each Rs. 5-8-0

POLITICAL 36" × 40"

INDIA In ENGLISH, TAMIL, TELUGU, AND MALAYALAM Each Rs. 6-8-0
WORLD IN ENGLISH ,, Rs. 5-8-0

## RELIEF MAPS

Plaster of Pair 30 × 40 in English
ASIA PARIS Each Rs. 30-0-0
INDIA ,, Rs. 25-0-0

## GLOBES

Size 8" TAMIL, TELUGU, AND MALAYALAM Each Rs. 8-8-0
(With improved Fittings) Rs. 10-8-0
Size 12" ENGLISH ONLY ,, 22-8-0
,, OUTLINE GLOBE ,, 25-0-0

**Packing & Forwarding Extra.**

*Stocks from:*

**The Central Scientific Supplies Company, Ltd., 16, SEMBUDOSS ST., G. T. MADRAS.**

# முதியோர் கல்வி

by "வே"

கல்வியில் இந்தியாவின் கேவலமான நிலைமை.

இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் கோடிக்கணக்காக இருக்கின்றனர். நூற்றுக்குப் பதினைந்து பேர் வீதம் தான் எழுத்தறிவு உள்ளவர்கள் என்று அரசாங்கத்தார் எடுத்துள்ள ஜனசங்கிலை கணக்கிலிருந்து தெரிகிறது. இவ்வளவு கேவலமான நிலைமையை எந்த நாகரிகமுள்ள நாட்டிலும் பார்க்க முடியாது.

ஆனால் இந்தியாவும் நாகரிகம் மிகுந்த நாடுதான். பழங்காலத்தில் இந்தியாவிலிருந்து நாகரிக ஒளி அயல் நாடுகளில் பரவியதாகச் சரித்திரங்களில் வாசிக்கின்றோம். பழையகாலம் வேறு. தற்காலம் வேறு. தற்காலத்தில் பழைய பெருமைகளைச் சொல்லி மகிழ்ச்சியடைவதில் பயனில்லை. 40 கோடி இந்திய மக்களுள், 34 கோடி மக்கள் எழுத்து வாசனையே இல்லாமல் இருப்பது நாட்டின் தாழ்ந்த நிலைமையைத் தான் காட்டுகிறது.

முன்னேற்றத்திற்கு கல்வி அபிவிருத்தி ஒன்றே வழி.

இந்த நிலைமையிலிருந்து முன்னேற்றம் அடைய ஒரே ஒரு வழிதான் உண்டு. அது கல்வி அபிவிருத்தி தான். ஒவ்வொரு பிள்ளையும் பெண்ணும் கட்டாயம் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்கவேண்டும். இந்த அவசியத்தை உணர்ந்த இந்திய அரசாங்கத்தார் யுத்தம் முடிந்த பிறகு எவ்வாறு கல்வியைப் பரவச் செய்யலாம் என்பதைப் பற்றி ஒரு திட்டம் வெளியிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும், ஆணும் பெண்ணும், ஆறுவது வயது முதல் பதினான்காம் வயது வரையில் கட்டாயம் பள்ளிக் கூடத்தில் வாசிக்க வேண்டும்; பள்ளிக்கூடங்களில் ஆரம்பக் கல்வி இலவசமாக அளிக்கப்படவேண்டும்; இத்தகைய கல்வியை அளிப்பது அரசாங்கத்தாரின் கடமையாகும் என்று அத்திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இத்திட்டம் அமுலுக்கு வருமானால் ஆரம்பக் கல்விக்காக ஆண்டு தோறும் அரசாங்கத்தார் 200 கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

பெற்றோர் கூட்டுறவு அவசியம்.

இவ்வளவு பெருந்தொகையைசெலவு செய்து கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை அளிக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வதாக வைத்துக்கொள்ளுவோம். குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவோர் யாவர்? அவர்களை எட்டு வருஷ காலம் படிக்க விட்டு வைப்பவர் யாவர்? பெற்றோர்கள் அல்லவா? இந்தப் பெற்றோர்கள் அரசாங்கத்தாருடன் ஒத்து உழைக்காவிட்டால், ஆரம்பக் கல்விக்காகச் செலவிடப்படும் பெருந்தொகை பயனளிக்காமல் போய்விடும் என்பது நிச்சயம்.

பெற்றோர்கள் பெரும்பாலோர் எழுத்தறிவு இல்லாதவர்கள் ஆயிற்றே.

இப்பெற்றோர்கள் கல்வியின் அவசியத்தை அறிவார்களா? அவர்கள் பெரும்பாலோர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தானே. தாங்கள் கல்வி கற்றிருந்தால், தமது குழந்தைகளும் கல்வி கற்கவேண்டும் என்று பெற்றோர்கள் நினைத்து, கட்டாயக் கல்விச் சட்டத்திற்கு இணங்கி, குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவார்கள். இல்லாவிட்டால், கட்டாயக் கல்வியை அமுலுக்குக் கொண்டுவருவதே சாத்தியமாகாது. ஆகையால் இப்போது எழுதப்படிக்கத் தெரியாத முதியோர்களுக்கு கல்வியில் ஆர்வம் உண்டு பண்ணுவது அவசியமாகும். 'முதியோர் கல்வி' யின் அவசியத்திற்கு இது ஒரு காரணம்.

எழுதப்படிக்கத் தெரியாதவர்களுடைய நிலைமை என்ன?

இந்தக் காரணம் அவ்வளவு முக்கியமானதல்ல. 'முதியோர் கல்வி'யை விருத்தி செயவதற்கு மற்றொரு அவசியம் இருக்கிறது. இந்தியா சுயராஜ்யம் பெற்று சுதந்திர நாடாக விளங்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள் அல்லவா? சுயராஜ்யம் பெற்று விட்டோம் என்று நினைத்துக்

கொள்ளுவோம். அப்போது ஆட்சி செய்பவர்கள் யார்? யாருக்கு அரசாங்கத்தில் செல்வாக்கும், அதிகாரமும் இருக்கும் என்பதைப் பற்றி யோசிப்போமானல், இப்போது எழுதப் படிக்கத் தெரிந்து கொண்ட ஆறு கோடி மக்கள் எழுத்து வாசனையே இல்லாத முப்பத்துநான்குகோடி ஜனங்களின் மீது அதிகாரம் செலுத்துவார்கள் அல்லவா?

எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளுவது அவசியம்.

இந்த நிலைமையில், சுயராஜ்யம் பெற்ற பின், எல்லாவகையிலும் குடிகளின் இஷ்டப்படி ஆட்சி நடக்கும் என்று எப்படிச் சொல்லக்கூடும்? தேர்தல் காலங்களில் எழுத்தறிவில்லாத குடிகள் தங்கள் வாக்குரிமையைச் சரியாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். வகுப்புவாதங்களிலும், சமயப் பூசல்களிலும் சிக்கிக் கொள்ளாமல் அவர்கள் தங்கள் சுய அறிவைக்கொண்டு அரசியல் பிரச்னைகளைப் பற்றி தீர யோசித்துத் தங்கள் வாக்குரிமையைப் பயன் படுத்தாவிட்டால், சுயராஜ்யம் கிடைத்தும், அரசாட்சியில் இடம் பெறமாட்டார்கள். ஆகையால் இளமையில் பள்ளிக் கூடம் செல்லும் வசதி பெறாத, முதியோர்கள் அனைவரும் கல்வி பெற்று, தங்கள் உரிமையையும் கடமையையும் அறிந்து கொள்ளுவது அவசியமாகும்.

எழுத்தறிவு கல்வியாகாது அது கல்விபெறுவதற்கு வழியாகும்.

கல்வி, என்றால் எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளுவதோடு நிற்பது என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டால் கல்வி என்னும் ஏணியில் முதற் படியில் ஏறியதாகும். கல்விக்கு அது அடிப்படை என்று சொல்லாம். அவ்வளவு தான். எழுதப் படிக்கத் தெரிந்தவன் பல விஷயங்களைத் தானே படித்து அறிந்து கொள்ளக்கூடும். சமாசாரப் பத்திரிகைகளும், புத்தகங்களும் மலிந்திருக்கும். இக்காலத்தில் ஒருவன் தன் சுய அறிவைக் கொண்டு படித்தும், கேட்டும், சிந்தித்தும் எந்த விஷயத்தைப் பற்றியும் தானே ஒரு முடிவுக்கு வரக்கூடும். நாட்டின் நலத்திற்கும், சமூகநலத்திற்கும் இது நல்லது இது கெட்டது என்ற பகுத்தறிவு குடிகளுக்கு ஏற்படவேண்டும். அவ்வித அறிவு பெறுவதற்கு எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதுதான் வழியாகும்.

முதியோர் கல்வி' அவசியமானதென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். சிலர் எழுத்தறிவு உண்டாகும்படி செய்தால் போதுமானது என்று சொல்லுவார்கள். எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது கல்வியின் அஸ்திவாரம் தான் என்று சொல்லப்பட்டதல்லவா? உண்மையான பயனுள்ள், முதியோர்களுக்கு அளிப்பதானல், அவர்களுக்கு உலக அறிவு உண்டாகும்படிச் செய்யவேண்டும். சரித்திரத்தின் போக்கு, ஆட்சி முறை, பொருளாதாரம், சுகாதாரம், தற்காலத்திய விஞ்ஞான முறையின் விளைவு, சமூக வளர்ச்சி முதலிய பல விஷயங்களைப் பற்றி முதியோர்களுக்குப் போதித்தல் அவசியமாகும் மேலும் ஏதாவது சிறு குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிப்பதும் நலமாகும்.

மேல் நாடேகளில்.

இத்தகைய கல்வியை முதியோருக்கு அளிக்க மேல் நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. படிக்காதவர்களுக்கு மாத்திரம் அல்ல, படித்தவர்களுக்கும் அவரவர்களுடைய ஓய்வு நேரத்தில் பொதுவாக உலக விஷயங்களைப் பற்றியும், தொழில் முறைகளைப் பற்றியும், பயிற்சி அளிக்க பல கழகங்களும், பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

நம் நாட்டிலும் 'முதியோர் கல்வி'யின் அபிவிருத்தி திட்டம் மேல் நாட்டினர் பின்பற்றும் வழியில் தான் அமையும், என்று சொல்லலாம். ஆனல் அது இந்தியரின் வாழ்க்கைக்கு உகந்த கல்வியாக இருக்கும்.

முதியோர் கல்வி திட்டம்.

இந்தியாவில் 'முதியோர் கல்விக்காக அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள திட்டத்தில் பின்வரும் அம்சங்கள் முக்கியமானவை: 25 வருஷ காலத்திற்குள் எழுத்தறிவு பெறாத முதியோர்கள் அனைவருக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து விடவேண்டும். மேலும் அவர்களுக்குப் பொது விஷயங்களைப் பற்றியும் தொழிலைப் பற்றியும் போதிக்கவேண்டும். இந்தப் பொறுப்பை முற்றிலும் அரசாங்கத்தாரே ஏற்றுக்கொண்டு, ஆண் பெண் என்ற வேற்றுமையின்றி எல்லா முதியோர்களுக்கும் கல்வி அளிக்கத் தேவையான பணத்தை செலவு செய்ய வேண்டும்.

என்ன செலவாகும்?

இத்திட்டத்தின் படி முதியோர் கல்விக்காக அரசாங்கத்தார் சுமார் 60 கோடி ரூபாய் 25 வருஷங்களில் செலவு செய்ய நேரலாம். இப்போது இந்தியாவில், பத்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடையில் சுமார் 15 கோடி மக்கள் இருக்கின்றனர். அவர்களுள் சுமார் 2 கோடி பேர்கள் தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர். மற்ற 13 கோடி மக்களுக்கு எழுத்தறிவு உண்டாக்க வேண்டும். அந்த வேலை 25 வருஷ காலம் முடிவதற்குள், எவ்வளவோ பேர் ஆயுளும் முடிந்து விடலாம்; எவ்வளவோ பேர், இப்போது யௌவன பருவத்தில் இருந்தாலும், நாற்பதாம் வயதைக் கடந்து விடலாம். இந்த வகையில் சுமார் 4 கோடி மக்கள் கழிந்து விடுவர். மிகுந்த ஒன்பது கோடி பேர்களுக்கு கல்வி கற்பிக்க எவ்வளவு தொகை செலவாகும் என்று கணக்கு போட்டிருக்கிறார்கள்.

முதியோர் கல்விக்காக 25 பேருக்கு ஒரு உபாத்தியாயரை நியமனம் செய்வதாக வைத்துக் கொள்ளலாம். இந்த 9 கோடி முதியோர்களுக்கு 36,00,000 உபாத்தியாயர்கள் தேவை. ஒவ்வொரு உபாத்தியாயரும் ஒரு வருஷத்தில் 100 மணி நேரம் வேலை செய்து, 100 ரூபாய் ஊதியம் பெறுவாரென்றால், மொத்தம் 36 கோடி ரூபாய் வேண்டியிருக்கும். மேற் செலவுகளுக்காக 6 கோடி ரூபாயைக் கூட்டிக் கொண்டால், 42 கோடி ரூபாய் வேண்டும். முதியோருக்குப் பொது விஷயங்களைப் பற்றி போதிக்க 18 கோடி அளித்தால் முதியோர் கல்விக்காக மொத்தத்தில் 60 கோடி ரூபாய் அவசியமாகும். அதாவது வருஷத்திற்கு சுமார் 3 கோடி ரூபாய் செலவு.

முதியோர் கல்வி அரசாங்கத்தாருடைய கடமை.

இப்பெருந் தொகையைச் செலவு செய்து எல்லோருக்கும் எழுதப்படிக்கும் திறமையை உண்டாக்க வேண்டியது அரசாங்கத்தார் கடமை தான். அந்தக் கடமையை அவர்களும் ஏற்றுக் கொண்டு, எழுத்தறிவை எல்லோருக்கும் அளித்தால் நாட்டின் நிலைமை மாறிவிடும் நாட்டு மக்கள் அனைவரும் கல்வி வளர்ச்சியில் ஊக்கங் கொண்டு, தங்கள் வாக்குரிமையைச் சரியாக உபயோகப்படுத்தினால், எல்லா முன்னேற்றங்களுக்கும் கல்வியே அஸ்திவாரம் என்று உணர்ந்து ஆட்சி நடத்தக் கூடிய அரசாங்க அமைப்பு ஏற்படும் என்பது நிச்சயம்.

'கல்வி'யின் வளர்ச்சிக்காக ஒரு திட்டத்தை அரசாங்கத்தின் கல்வி இலாகா வகுத்தது போற்றத்தக்க விஷயமே. எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதை இத்திட்டம் வற்புறுத்துகின்றது. எந்த கல்வி திட்டத்திலும் 'முதியோர் கல்வி' ஒரு முக்கியமான பாகமாகும் என்றும் இத்திட்டம் சொல்லுகிறது. இத்திட்டம் அமுலுக்கு வருமானால் ஒரு தலைமுறைக்குள் எழுத்தறிவு இல்லாத மக்களே இந்தியாவில் காணப்படமாட்டார்கள். இந்தியாவும் மற்ற நாடுகளுக்குச் சரிசமானமான நிலையில் அமர்ந்து, முன்னேற்றத்தின் முன்னணியில் திகழ்ந்து வரும் என்பது நிச்சயம்.

# செய்தித்திரட்டு

### திருப்பத்தூர் தாலூகா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு வாணியம்பாடி

23—9—44-ல், காலேயில் மகாநாடு இஸ்லாமியா ஹைஸ்கூலில் நடைபெற்றது. ஸப் கலெக்டர் ஸ்ரீ ஆர். பி. கபூர் பொருட் காட்சியைத் திறந்து வைத்தார். ஜில்லாக் கல்வி யதிகாரி ஜனப் அப்துல் கயூம் சாகிப் பகதூர் தலைமை வகித்தார். டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ சங்கர நாராயணய்யர் எல்லோரையும் வரவேற்றார். உதவி ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ வில்வராய் தற்கால யுத்தத்தைப்பற்றியும், கைத்தொழிலைப்பற்றியும், யுத்த சேவையைப்பற்றியும் பேசினர்.

மாலேயில் ஜனப் மலங்கு அகமத் பாஷா ஸாஹேப் பகதூர் தலைமை வகித்தார். ஜில்லா கல்வி யதிகாரி மகாநாட்டைத் திறந்து வைத்தார். சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜ் ஸ்ரீ ஜகன்னதன் இயற்கைப் பொருட் பாட திட்டம் போதிக்கும் முறையைப் பற்றிப் பேசினர். வேலூர் ஸ்ரீ நாராயண ராவ் தேக அப்பியாச முறைகளை செய்து காட்டினர். மாணவ மாணவிகளால் விளையாட்டுகள் நடைபெற்ற பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலேந்தது.

### குடியாத்தம் தாலுக்கா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், காட்பாடி

27—8—44-ல் ஸ்ரீ ரெங்கசாமி அய்யங்கார் தலைமையில், ஜனரல் பாடி மீட்டிங் நடைபெற்றது. பஞ்சப்படி, சம்பள உயர்வு, லீவு, பிராவிடெண்டு பண்டு முதலிய விஷயமாய் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கல்வியின் அவசியத்தைப் பற்றி பொது ஜனங்களுக்குப் பிரசாரம் செய்ய ஒரு கமிட்டி நிறுவப்பட்டது.

### சரக ஆசிரியர் கழகம், திட்டகுடி

16—9—44-ல் நடந்த கூட்டத்தில், காரியதரிசி ஸ்ரீ வைத்தினத சுவாமி அய்யர் 'இரண்டாம் வகுப்புக்குக் கணிதம் நடத்துதல்' என்பது பற்றி விளக்கச் சித்திரங்களுடன் தெளிவுற நடத்திக் காட்டினர். தலைவர்கள் ஸ்ரீ கே. எஸ். ரெங்கனத அய்யரும், ஸ்ரீ கே. ஆர். சீனிவாசனும் யுத்த முயற்சி பற்றிப் பேசினர்கள்.

### ஏ. ஆர். நடேசன் செட்டியார் உயர்தர ஆரம்ப பாடசாலே, சிவகங்கை

7—9—44-ல் ஜில்லா முன்சீப், ஸ்ரீ வரதராஜுலு நாயுடு, தலைமையில், 11-வது ஆண்டு விழாவும், ஸ்தாபகரின் 60-வது ஆண்டு நிறைவு விழாவும் கொண்டாடப்பட்டன. உத்தியோகஸ்தர்களும் பெற்றோர்களும் ஏராளமாகக் குழுமி இருந்தனர். விளையாட்டுப் பந்தயங்களிலும், வியாசப்போட்டியிலும் தேர்ந்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

'நவீன குசேலா' என்னும் நாடகத்தை மாணவர்கள் திறம்பட நடித்தனர்.

### திருநாவுக்கரசு வித்யாசாலே நேமத்தான்பட்டி,

(a) 11-9-44-ல் திருச்சி திரு. சிவராம கிருஷ்ணய்யர் தலைமையில், பாரதி விழா கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகள் பாரதியாரின் வாழ்க்கை, பெருமை, கவிக் கூற்று முதலியனபற்றிப் பேசியும், நடித்தும் காட்டினர். பழயமாணவன் திரு. செல்லப்பன் கவி இன்பத்தைப் பற்றிப் பேசினன்.

பழய மாணவர் சங்கம், திரு. அருணசலஞ் செட்டியார் தலைமையில் கூடி புது வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(b) 1—10—44-ல், இப்பாடசாலேயின் அரிச்சந்திர சாரணப் படையினர் கானடுகாததான் இராம கிருஷ்ண படைத்தலைவர் ஸ்ரீ கருப்பஞ் செட்டியார் தலைமையில், சாரணர் விழாவைக் கொண்டாடினர். தலைவர், அன்னி

பெண்டு அம்மையைப் பற்றும் சாரணீயத்தின் மேன்மையைப் பற்றியும் பேசினர். பின்பு, சாரணர்களும் ஆசிரியர்களும் ஊர்வலம் சென்று வந்தனர்.

(c) 2—10—44-ல் திரு. கருப்பஞ் செட்டியார் தலைமையில் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாகொண்டாடப் பட்டது. மாணவ மாணவிகளும் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரமய்யரும், அடிகளின் அரும்பணிகளைப் போற்றிப் பேசினர்.

## திருத்துறைப்பூண்டி தாலுகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன்

3—9—44-ல் காலையில் ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரிகள் தலைமையில் மகாநாடு கூடியது. ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீ நாடிமுத்துப்பிள்ளை மகாநாட்டைத் திறந்து வைத்து, 'கல்வியின் அபிவிருத்தி' என்பதுபற்றிப் பேசினர்.

தலைவருக்கும், திறப்பாளருக்கும் வரவேற்புப் பத்திரங்கள், ஸ்ரீ சிவ சிதம்பரம் பிள்ளையால் வாசித்து அளிக்கப் பட்டன.

'தலைவர், 'கல்வி முன்னேற்றமும் ஆசிரியர், கடமையும்' என்பதுபற்றி பிரசங்கம் செய்தார்.

கீழ்த் தஞ்சை செஷன்ஸ் ஜட்ஜ் ஸ்ரீ கணேசய்யரும், கீழ்த் தஞ்சை பெண் பாடசாலை பரிசோதகர் ஸ்ரீ செல்லம்மாளும் 'ஆசிரியர்களும் அவர்களது கடமையும்' என்பதுபற்றி பேசினர்கள்.

மாலையில், பாடசாலைப் பரிசோதகர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் தலைமை வகித்தார். புது வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரையில் 'ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் பொறுப்பு' என்பதுபற்றிப் பேசினர்.

## இந்து ஆரம்ப பாடசாலை, அரியரன்கூடல்

26—9—44-ல், வேலம் புதுக்குடி முகம்மதிய பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ கோவிந்தராஜன் தலைமையில், வாணி விழாவும், பெற்றோர் தினமும் கொண்டாடப்பட்டன. பழைய மாணவன் ஸ்ரீ ராமலிங்கம், 'கல்வி கற்றல்' என்பதுபற்றி உபந்நியசித்தான். இவனைப் பின்பற்றி பாலகிருஷ்ணன் பேசினன்.

தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஏ. நடராஜன் 'பெண் கல்வி' என்பதுபற்றிப் பேசினர். அவரைத் தொடர்ந்து ஆசிரியர் ஸ்ரீ மணிமுத்து விரித்துரைத்தார். தலைவர் முடிவுரைக்குப் பின், சந்தண தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

## சொக்கலிங்க வித்யாசாலை, லட்சுமிபுரம்

11—9—44-ல், கானடு காத்தான் டாக்டர் திரு. ஜானகிராம் தலைமையில், ஸ்ரீ பாரதியார் விழா கொண்டாடப் பட்டது. மாணவ மாணவிகள் பாட்டு, நடிப்பு, கும்மி முதலியன நிகழ்த்தினர்கள். பாரதிப் பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவர் முடிவுரையில் ஸ்ரீ பாரதியாரின் சேவைகளைப்பற்றிப் புகழ்ந்து கூறினர்.

## போர்டு எலிமெண்டரி பாடசாலை, ந. புதூர்

3—9—44-ல் இப்பாடசாலை இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், அருகிலுள்ள விநாயகர் கோவிலில் நேசநாடுகள் வெற்றியடைய வேணுமாய்ப் பிரார்த்தனை செய்தது. பின்பு அக்கோயிலுக்கு முன்பு, தலைமை ஆசிரியர், ஸ்ரீ கலியாண சுந்தரமய்யர் தலைமையில், பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தற்கால யுத்தத்தை விளக்கியும் பிரார்த்தனையின் அவசியத்தையும் பற்றிப் பேசினர், உதவி ஆசிரியர் ஸ்ரீரங்கசாமி 'தற்கால யுத்த நிலைமை' என்பதுபற்றிப் பேசினர்.

---

குறிப்பு :—காகிதப் பக்கக் கட்டுப்பாட்டின் விளைவால், பத்திராதிபர் குறிப்பு இல்லாமலே இவ்விதழை வெளியிடவேண்டி யிருக்கிறது.

# சிறு சேமிப்புத் திட்டம்

பதுக்கி வைக்கவோ
அளவிற்கு மீறி செலவு
செய்யவோ வேண்டா
மென்றும்
எதிர்காலத்தில்

★

தனக்காகவும்
தன் குழந்தை
களுக்காகவும்

மிச்சம் செய்ய வேண்டு
மென்றும் கேட்டுக்
கொள்ளுகிறது.

உங்கள் பணத்தை

பெருக்குகிறது

| ஒவ்வொரு | | 12 வருஷங்களுக்குப் பிறகு | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| ரூ. | 10-க்கும் | | ரூ. 15 |
| ,, | 50 | | ,, 75 |
| ,, | 100 | | ,, 150 |
| ,, | 500 | | ,, 750 |
| ,, | 1000 | | ,, 1500 |
| ,, | 5000 | | ,, 7500 |

இதற்கு

வருமான வரி கிடையாது.

★

**நாஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளை**
**வாங்குங்கள்**

கிடைக்குமிடம் :—

அதிகாரம் பெற்ற ஏஜண்டுகள், தபால் ஆபீஸ்கள், ஸேவிங்ஸ் பீரோக்கள், வருஷத்திற்கு 100-க்கு 4 1/6 வட்டி கிடைக்கும்.

★ ஒவ்வொருவரும் ரூபாய் 5000 - க்கு அதிகப்படாமல் சர்டிபிகேட்டுகள் வாங்கலாம்.


*Regd. No. M. 3473*

இந்திய தேயிலையின் அபிவிருத்தி

## இந்தியா அதைத் தனக்கே சொந்த மாக்கிக்கொண்டது



வருஷத்துக்கு வருஷம் தேயிலை பழக்கமுள்ளவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் ஜாஸ்தியாகிக்கொண்டே வருகிறது. பத்துகோடி பவுன் தேயிலை வருஷத்துக்கு செலவாகிறது. இன்னும் வரவர அந்த அளவு ஜாஸ்தியாகிக்கொண்டே வரும். இந்தியாவின் ஜனத்தொகை ... இதனுடன் தேயிலை உபயோகிப்போர்களின் எண்ணிக்கை இனியும் பெருகுவதற்கு வளர எவ்வளவு இடமிருக்கிறது! தேயிலைத்தொழில் தேசியமானது என்று சொல்லத்தக்க தேயிலை பொதுமக்கள் விரும்பும் பாத்திரமாகிவிட்டது. இந்தியத் தேயிலையே ருசியுள்ளது. உலகத்தில் இதைத்தவிர வேறு நல்ல பானமே கிடையாது.




இந்த விளம்பரத்தைக் கத்தரித்து எடுத்து உங்களுடைய பெயர் விலாசம் தொழில் முதலிய விபரங்களுடன் அனுப்புங்கள். விலாசம்: இந்தியத் தேயிலைக் கமிஷனர், இந்தியத் தேயிலை மார்கெட் விஸ்தரிப்பு போர்டு, தபால்பெட்டி நெ. 2172, கலகத்தா. மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பினால், "தி மார்ச் ஆப் இந்தியன் டீ" என்ற புத்தகம் உங்களுக்கு இனாமாக அனுப்பப்படும். அது தேயிலைத் தொழிலைப்பற்றியும் அது எவ்வளவு உன்னதமான பானம் என்பதைப்பற்றியும் வர்ணிக்கும் புத்தகம்.

# இந்தியத்தேயிலே

## உலகத்தின் உன்னத பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IS-139

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St. Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 320, High Road, Triplicane, Madras